T. 2630


ல்லுப் பாட்டு

# தமிழ் வளர்ந்த கதை

MANUSCRIPTS LIBRARY
28 DEC 1959
MADRAS



கழக வெளியீடு




அ. க. நவநீத கிருட்டிணன்

வில்லுப்பாட்டு

# தமிழ் வளர்ந்த கதை

வித்துவான்
அ. க. நவநீத கிருட்டிணன்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை-1.

First Edition: Aug., 1952

[ All Rights Reserved ]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., 1/140, BROADWAY :: MADRAS-1.

*Head Office:*

24, EAST CAR STREET :: THIRUNELVELI

Appar Achakam, 2/140, Broadway, Madras-1

# பதிப்புரை

வில்லுப்பாட்டு தமிழகச் சிற்றூர்களில் இந்நாளிலும் பாராட்டப்பெறும் நல்லிசையாகும். பல்வகைக் கதைகள் வில்லுப்பாட்டாகப் பாடப்பெற்று வருகின்றன. பெரும் பாலும் வில்லிசை சிறுதெய்வ வழிபாட்டுக் காலங்களிலேயே பெரிதும் பயின்றுவந்தமையால் கதைகளும் சிறுதெய்வக் கதைகளாகவே விளங்கின. வில்லிசையைத் தமிழ்மக்கள் அனைவரும் கேட்டுப் பயன் எய்தப் புத்தம் புதுக் கருத்துக்களுடன் உணர்வூட்டும் வரலாறுகளும் அவ்விசைப்பாடல்களாக அமைக்கப்பெறல் வேண்டும். அத்துறையில், புலவர் நவநீதகிருட்டிணனாரின் முதன் முயற்சியாகிய இத் '**தமிழ் வளர்ந்த கதை**' தமிழ் உணர்வு பெருக்கும் வகையில் கழகவழி வெளிவருகின்றது. தமிழகம் விருப்புடன் ஏற்று மகிழும் என நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# முன்னுரை

தெய்வத் தமிழ்வழங்கும் தென்பாண்டி நாட்டிற்கே உரிய நல்லிசையாகிய வில்லுப்பாட்டு, கற்றவரல்லாத மற்றவர்க்கே களிப்பை விளைப்பதாய் விளங்கியது. சில ஆண்டுகளாகக் கற்றவர்க்கும் கழிபேருவகையூட்டும் கலையாக மாறிவருகின்றது.

காட்டகத்தே வேட்டையாடப் புகுந்த வில்வீரன், வேட்டையாடிக் களைப்புற்றுத் தண்ணிழல்தரும் மரமொன்றன் அடியில் அமர்ந்தான். தன் கையமர்ந்த வில்லைத் தரையில் சார்த்தி, அவ் வில்நாணில் அம்புக் கோலால் தாளவறுதி தோன்றத் தாக்கினான். அத் தாளத்திற்கேற்பப் பண்ணமைந்த தமிழ்ப்பாடல் பாடினான். அதனால் களைப்பு நீங்கிக் களிப்போங்கப் பெற்றான்.

பண்டுதொட்டு இவ்வில்லிசையில் சிறு தெய்வக் கதைகளே பயின்று வந்தன. சிறந்த வரலாறுகளை இவ் வில்லிசையில் அமைத்துப் பாடினால் கல்லார்க்கும் கற்றவர்க்கும் நல்ல கருத்துக்கள் எளிதில் உள்ளத்தில் பதியும் என்னும் எண்ணத்தால் 'தமிழ் வளர்ந்த கதை' என்னும் இவ்வில்லிசைப் பாடலை இயற்றினேன். இதனை எங்கள் நெல்லை அருணகிரி இசைக் கழகத் தமிழ்த்திருநாள் அரங்கத்தில் அரங்கேற்றினேன். இதனைக் கேட்ட பல்லாயிரக் கணக்கான மக்கள் அகமகிழ்ந்து பாராட்டினர். வில்லுப்பாட்டில் இஃதொரு மறுமலர்ச்சியென வியந்து போற்றினர்.

இங்ஙனம் அறிஞர் பலர் ஊக்கமூட்டியதன் விளைவாகத் திருவள்ளுவர் வரலாறு, பத்துப்பாட்டின்பம், சிவஞான முனிவர் வரலாறு, மெய்கண்டார் வரலாறு, திருஞானசம்பந்தர் வரலாறு, மாணிக்கவாசகர் வரலாறு முதலிய பல கதைகளை வில்லிசையில் அமைத்தேன்.

'தமிழ் வளர்ந்த கதை' வில்லிசையைக் கேட்டு வியந்த தருமையாதீன மகாசந்நிதானம் அவர்கள், வில்லிசைக் குழுவினர் எழுவர்க்கும் பொன்னாடை போர்த்தி வாழ்த்தி யருளினார்கள். நல்லார் பல்லார்தம் பாராட்டைப்பெற்ற 'தமிழ் வளர்ந்த கதை' வில்லுப் பாட்டைப் பாடக்கேட்ட சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக அமைச்சர் திருவாளர். வ. சுப்பையாப் பிள்ளையவர்கள் விரும்பி அச்சிட்டு, வில்லிசையை நாடெங்கும் பரப்பும் நன்னோக்கம் கொண்டுள்ளார்கள். இதன் வாயிலாக எனது தமிழ்ப்பணிக்கு ஊக்கந்தரும் பிள்ளையவர்கட்கு எனது உள்ளம் நிறைந்த நன்றியையும் வணக்கத்தையும் செலுத்துகின்றேன்.

தமிழ் வெல்க !

அ. க. நவநீத கிருட்டிணன்
நெல்லை அருணகிரி இசைக் கழக
விரிவுரைப் பொறுப்பாளர்.

தமிழ் ஓங்குக !

# தமிழ் வளர்ந்த கதை

## கடவுள் வணக்கம்

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே !
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே !
கன்னித் தமிழ்வளர்ந்த கதையினைச் சொல்லுதற்கு
இன்னருளைத் தந்தெனக்கு முன்னின்று காத்தருள்வாய் !

## தமிழ்த்தாய் வணக்கம்

கன்னலோ தேனோ கற்கண்டோ நற்கனியோ
இன்னமுதோ என்ன இனிக்கும் தமிழ்த்தாயே !
நீ வளர்ந்த நற்கதையை நீள்நிலத்தில் நான்சொல்ல
நாநிறைந்து பாவளர நல்லருள்நீ செய்திடுவாய் !

## வசனம்

ஆகா ! தேனோ ! பாலோ ! கற்கண்டோ ! தெவிட்டாத தெள்ளமுதோ ! கற்பவர் கேட்பவர் கருத்தெல்லாம் இனித்திடும் இன்பத் தமிழ் நம் தாய் மொழி. அது பிறந்து வளர்ந்த பெருங்கதையைச் சிறியேனால் செப்ப முடியுமோ ? ஆயிரம் நாப்படைத்த ஆதிசேடனாலும் அறைய

முடியாதே! ஒரு நாக்குடைய நான் எப்படிச் சொல்வேன்! நீங்களோ கேட்க உட்கார்ந்திருக்கிறீர்கள். நான் சொல்லாமற்போனல் விடமாட்டீர்கள். அதனலே எனக்குத் தெரிந்தமட்டும் சொல்கிறேன், கேளுங்கள்.

பாட்டு

பேரவையில் கூடியுள்ள பெரியோரே! கேளுங்கள்
சீரான தமிழ்வளர்ந்த செய்தியினைக் கேளுங்கள்
நேராகக் கேடுபல நிலைகுலைக்க வந்தாலும்
பேராது தமிழ்வளர்ந்த பெருங்கதையைக் கேளுங்கள்

இசை வேறு

தமிழர் திருநாடே தாரணியில் முதல்தோற்றம்
அமுத மொழிகண்டார் அருந்தமிழர் அந்நாளில்
இயற்கையோ டியைந்தமொழி இன்பம் நிறைந்ததமிழ்
நயங்கள் நிறைந்தமொழி நல்லறிஞர் கண்டதமிழ்
எப்போ பிறந்ததென்று எவரும் அறிந்ததில்லை
ஒப்பில்லா இன்பத்தமிழ் உலகில் முதன்மொழியே
குமரியின் தென்திசையில் குளிர்ந்த வளநாடு
தமிழர் திருநாடு தழைத்தோங்கி யிருந்ததையோ!
அந்நாட்டில் தென்மதுரை அழகான நன்னகரில்
தென்னன் தமிழ்ச்சங்கம் திறம்பெறவே அமைத்திட்டான்
கன்னித் தமிழ்மொழியைக் கருத்தாய் வளர்த்திட்டான்
பன்னூறு புலவரதில் பழந்தமிழை ஆய்ந்திட்டார்
பின்னர்க் கபாடபுரம் பெரியதொரு தமிழ்நகரம்
மன்னு தமிழ்ச்சங்கம் மறுபடியும் அமைத்திட்டான்
அதிலும் பலபுலவர் அருந்தமிழை ஆய்ந்திட்டார்
மதிநுட்ப நிறைபுலவர் பலநூல்கள் வரைந்திட்டார்
இருசங்க நூல்களையும் பெருங்கடல் விழுங்கியதே

அரிய பல நூல்கள் அழிந்ததற்குக் கணக்கில்லை
தொல்காப் பியம்ஒன்றே நின்று துலங்கியது
ஒல்காப் புகழுடைய உயர்ந்த இலக்கணத்தை

(ஆத்திரத்துடன்)

விழுங்காது தான்விட்ட வியன்கடலைப் பாண்டியனும்
அழுங்கிப் புலம்பிடுவாய் அலைகடலே என்றென்றும்
புரண்டு புரண்டழுவாய் புவியோர் சிரிக்கவென்றும்
திரண்டவுன் னீரெல்லாம் வறண்டொழிவ தாகவென்றும்
பழித்துச் சபிக்கவில்லை-(கடலைப்)-பழித்துச்சபிக்கவில்லை
வழுத்தித் துதித்துநின்றான் வாயாரப் பாண்டியனும்
தமிழ்முனி அகத்தியனோ தாங்கவொண்ணாக் கோபங்
[கொண்டான்

இசை வேறு

இமைப்பொழுதும் ஓயாது இரங்கிப் புலம்பியழு
கடலே இடைவிடாமல் கதறி அழுதிடுவாய்
மடமை யொழியுமட்டும் மண்டையில் அடித்தழுவாய்
என்று சபித்திட்டான் தென்றமிழ்ப் பொதியமுனி.

இசை வேறு

அன்றே தமிழ்ச்சங்கம் மீண்டும் அமைத்திட்டான்
தென்மதுரைப் பொன்னகரில் சங்கம் திகழ்ந்ததையோ!
மன்னன் அமைத்திட்ட மாபெரும் சங்கமதில்
நக்கீரர் முதலான நாற்பத்தொன் பதுபுலவர்
தக்க தமிழ்மொழியை ஆராய்ந்து தானிருந்தார்
அந்தக் கடைச்சங்கம் அமர்ந்த தமிழ்ப்புலவோர்
சிந்தைக் கினியபல செந்தமிழ்ப் பாமாலை
தொடுத்துத் தமிழ்த்தாயைத் தூயஅணி செய்தார்கள்
அடுத்த கவிஞரெல்லாம் அழகுபல செய்தார்கள்.

## வசனம்

இந்த நக்கீரரைப் பற்றி எல்லோரும் கொஞ்சம் தெரியவேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே பாண்டிய மன்னனால் அமைக்கப்பட்ட பழந்தமிழ்ச் சங்கத்திற்குத் தலைவராக வீற்றிருந்த பேராற்றல் வாய்ந்த பெரும் புலவர் நக்கீரர். அந்தணர் மரபில் தோன்றிய செந்தமிழ்ப் புலவர். தமிழ்ப்பெருங் கடவுளாகிய முருகப்பெருமானது திருவருளைப் பெற்ற தெய்வக் கவிஞர். ஒருசமயம் இவருக்கும் சிவபெருமானுக்குமே சொற்போர்—வாக்குவாதம் நடந்தது. சிவபெருமான் பாடிய செந்தமிழ்ப் பாட்டில் பொருட் குற்றம் இருப்பதாக எடுத்துக் காட்டினார் இந்தப் புலவர். அப்போது சும்மாவிட்டாரா சிவன்! தமது நெற்றிக் கண்ணையும் கற்றைச் சடையையும் காட்டிப் பயமுறுத்தினார். அவற்றைக் கண்டு அஞ்சினாரா புலவர்? இல்லை, இல்லை. நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே! உடம்பெல்லாம் கண்களாகக் காட்டினாலும் அஞ்சேன்! என்று நெஞ்சுத் துணிவுடன் நிமிர்ந்து பேசினார். நக்கீரரின் வீரத்தை என்னென்பது! அத்தகைய நாவீறு படைத்த நக்கீரர்கள் நம் நாட்டிற்குப் பலர் தேவை.

நக்கீரர் காலத்திலே குயவன் ஒருவன்—கொண்டான் என்ற பெயரைக் கொண்டவன், வட நாட்டவர் வலைக்குள் சிக்கி, ஆரியப்பித்தனாகி, 'ஆரியம் நன்று தமிழ் தீது' என்று சொல்லிக்கொண்டே மதுரைத் தெருவெங்கும் முரசு கொட்டினான். அவனைக் கண்டார் நம் நக்கீரர். அளவில்லாத கோபம் கொண்டார். செந்தமிழ்ப் பாண்டி நாட்டின் தலைநகரமாகிய இந்த மதுரைமா நகரத்திலா இந்த வார்த்தை சொன்னாய்! "நீ ஆனந்தம் சேர்க" என்று சபித்தார். செத்தொழிந்தான். அந்தக் குயவன்.

குயவன் மாண்ட செய்தி மதுரைமா நகரில் எங்கும் பரவியது. மன்னன் பாண்டியனும் அறிந்தான். மாபெரும் சங்கப் புலவர்கள் அறிந்தார்கள். அறியாமையால் அங்ஙனம் முரசறைந்த,—எங்ஙனம்? "ஆரியம் நன்று தமிழ் தீது" என்று முரசறைந்த குயவன் கொண்டானை மன்னித்து உயிர்ப்பிச்சை யளிக்குமாறு நக்கீரரை வேண்டினார்கள். மனமிரங்கிய நக்கீரர்,

பாட்டு

ஆரியம் நன்று தமிழ்தீது எனவுரைத்த
காரியத்தால் காலக்கோட் பட்டானைச்—சீரிய
அந்தண் பொதியில் அகத்தியனார் ஆணையினால்
செந்தமிழே தீர்க்க சுவாகா !

வசனம்

என்று பாடினார்: குயக்கொண்டான் உயிர்பெற்றெழுந்தான். எழுந்ததும் நக்கீரர் திருவடிகளில் விழுந்து பணிந்தான். தன்னை மன்னிக்குமாறு வேண்டினான்.

இங்ஙனம் நாவீறு படைத்த நக்கீரர் போன்ற புலவர்களேயன்றி, நாடாண்ட புரவலர்களும்—அரசர்களும் நம் நற்றமிழைப் பொன்னேபோல் போற்றி வளர்த்தனர்.

பாட்டு

இசை வேறு

செழியன் கரிகால் வளவன் சேரன்
மழைபோல் வழங்கும் மாபெரு வள்ளல்கள்
பாரி முதலாம் பலகொடை மன்னர்கள்
சீரிய செந்தமிழ்ப் புலவரைப் போற்றினர்
புலவர் மொழிகளைப் பொன்னென எண்ணினர்
அலகில் பரிசுகள் அகமகிழ்ந் தீந்தனர்

வேலின் வெம்மையும் கோலின் செம்மையும்
சாலப் புகழ்ந்து போற்றிய நூலாம்
பட்டினப் பாலை பாடிய புலவர்க்கு
மட்டில் பெரும்புகழ்க் கரிகால் வளவன்
பதினறு நூரு யிரம்பொன் பரிசில்
இதமுறக் கொடுத்தான் இன்றமிழ் வளரப்
பத்துப் பாடலால் புகழ்ந்த பரணர்க்குச்
சித்தம் மகிழ்ந்து சேரன் குட்டுவன்
கொடுத்த பரிசினைக் கூறுவன் கேட்பீர்!
படுத்த கிழவனும் பாய்ந்தெழுந் திடுவான்!
குன்றின் மேலே ஏறி நின்ருன்
கண்டவூர் முழுதும் கவிஞர்க் களித்தான்
செல்வப் புதல்வன் குட்டுவன் சேரலையும்
நல்கி மகிழ்ந்தான் நாட்டவர் அறிய
அதியமான் அவ்வைக் களித்த நெல்லி
மதுரக் கனியின் மாண்பினைத் தெரிவீர்
அவ்வை யுண்ட அமுதக் கனியால்
இவ்வை யகத்தில் பல்லாண் டிருந்து
தமிழினை வளர்த்த தன்மையைத் தெரிவீர்
பொன்னும் மணியும் புவியும் நிதியும்
பன்னூறு யானையும் பாடிய புலவர்க்குத்
தந்தால் தமிழும் தழைக்கா தொழியுமோ!
இந்த நாளினில் செந்தமிழ்ப் புலவரைப்
போற்றிக் காக்கும் புரவலர் இல்லை
ஆற்றல் நிறைந்த புலவரும் அருமை!

வசனம்

இவ்விதமாகப் பல வள்ளல்களும் மன்னர்களும் புலவர்களை ஆதரித்துப் போற்றியமையாலே, கவலையற்று

வாழ்ந்த அந்தக் கவிஞரெல்லாம் செந்தமிழில் பல்லாயிரம் பாடல்களைப் பாடினார்கள். அந்த நாளில் அரசர்களும் அரசியர்களுங்கூடப், பெரும் புலமைபெற்று விளங்கினார்கள். அரண்மனைக் காவற்பெண்டும் (வேலைக்காரி) கன்னித் தமிழ்க் கவிதை பாடினாள். வெண்ணிக் குயத்தியும், குறமகள் இளவெயினியும் கொழிதமிழ்ப் பாடல் பாடினார்கள்.

பாண்டிய மன்னன் ஒருவன்—தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் என்பவன் ஒருகால் வஞ்சினம் (சபதம்) ஒன்று கூறினான்.

"நான் செய்யப்போகும் போரில் பகைவரை வெற்றி கொள்ளாவிட்டால், மாங்குடி மருதன் முதலான புலவர்கள் என் நாட்டைப் பாடாதொழிக!" என்று சூளுரைத்தான். இதிலிருந்து அப்பாண்டியன், புலவர்பால் கொண்ட பெருமதிப்பையும் தமிழிடத்துக் கொண்ட தணியாத வேட்கையையும் என்னென்பது!

"தன் தலைதனைக் கொண்டுபோய்த் தம்பி கைக் கொடுத்து, விலைதனைப் பெற்று வறுமை நோய் களை"யுமாறு புலமையாளனுக்கு அன்புமொழி கூறிய குமண வள்ளலின் தமிழார்வத்தை எங்ஙனம் போற்றுவது!

இங்ஙனம் தமிழ் வளர்க்கும் தாதாக்களாகத் தமிழ் மன்னரெல்லாம் விளங்கியமையாலேயே தமிழ் வளர்ந்தது. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு ஆகிய நூல்களெல்லாம் தோன்றின.

### பாட்டு

நற்றிணை குறுந்தொகை ஐங்குறு நூறு
கற்றவர் மெச்சும் கலித்தொகை யின்பம்

பதிற்றுப் பத்து, பரிபாட்டு அகம்புறம்
இதமுறும் எட்டுத் தொகைநூல் கண்டோம்
திருமுரு காற்றுப் படைமுத லான
பத்துப் பாட்டு முத்தணி கண்டோம்
தெய்வப் புலவர் தந்தசெங் கோலாம்
உய்வைத் தருநூல் உயர்ந்த திருக்குறள்
உலகம் முழுதும் ஏற்கும் ஒருநூல்
பலகலை நுட்பமும் குலவும் தனிநூல்
பாலென இனிக்கும் பார்புகழ் முப்பால்
காலமும் தேசமும் கடந்தது அப்பால்
அறம்பொருள் இன்பமாம் உறுதிப் பொருளை
திறம்பெறத் தெளிவாய் உரைக்கும் மறைநூல்
வையகம் வாழ வள்ளுவர் தந்தநூல்
கையகம் தாங்கிக் காத்தனள் அன்னை.

வசனம்

தெய்வப் புலவராகிய திருவள்ளுவர் தந்தருளிய தமிழ் வேதத்தின் பெருமையைக் கேளுங்கள்!

பாடல்

சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள்வெண் பா.

மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞாலம் முழுதும் நயந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவரும் தங்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவஎல் லாம்அளந்தார் ஓர்ந்து.

### வசனம்

நினைப்பவர் மனத்திற்கு இனியதாய், கேட்பவர் செவிக்கு இனியதாய், சொல்லுவார் வாய்க்கு இனியதாய்ப் பிறவிப் பிணிக்கே அரிய மருந்தாகத் திகழ்வது நம் திருக் குறள். ஒரு காலத்திலே திருமால்—வாமனனாக வந்த அந்தப் பெருமாள் வானமும் பூமியும் ஒரே வடிவாக வளர்ந்தான். தனது இரண்டு அடியினாலே உலகத்தை யெல்லாம் தாவியளந்தான். அதேபோல, நம் திருவள்ளு வர் பெருமானும், தமது குறள் வெண்பாவின் இரண்டு அடியினாலே—இல்லையில்லை! ஒன்றேமுக்கால் அடியினாலே இவ்வுலகத்திலுள்ள மக்கள் எல்லோருடைய உள்ளத்தை யும் அளந்து கூறினார்.

இத்தகைய திருக்குறள் ஓதற்கு இனியது; எளியது. ஆனால் உணர்வதற்கு அரியது. கள்ளமில்லாத உள்ளத்த வர்கள் நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் நெஞ்சத்தை உருக்க வல்லது. இத்தகைய நூலைத்தந்த வள்ளுவர், தமி ழர் ஒவ்வொருவர் உள்ளத்திலும் உறையவேண்டும். வள்ளுவரைப் படியாத எவனும் தமிழ்நாட்டு அரசியலில் பதவிபெறக்கூடாது. வள்ளுவருக்கு விழா, உலகநாடுகள் அத்தனையும் கொண்டாடுமாறு செய்யவேண்டும். தமிழ் நாட்டில் பிறந்த எந்த மகனும் எந்த மகளும், தன் சொந்த வேதம் திருக்குறளே! என்பதை உணர்ந்து,

### பாடல்

ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததன்பின்—போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ! மன்னு தமிழ்ப்புலவர்
ஆய்க்கேட்க வீற்றிருக்க லாம்.

இசைவேறு

உளங்கவர்ந் தினிக்கும் உயர்ந்த காவியம்
இளங்கோ புனைந்த முழங்கொலிச் சிலம்பு
திருத்தக்கர் சூட்டிய சிந்தா ஒளிமணி
சாத்தனார் அணிந்த தனிமணி மேகலை
குண்டல கேசியும் வளையா பதியும்
கொண்டணி பூண்டாள் தண்டமிழ் அன்னை
சேரர் வீரம் கூறிடும் பெருநூல்
பார்புகழ் பதிற்றுப் பத்தெனும் வடிவாள்
பதினெண் சின்னூல் பதக்கம் தாங்கினள்
நாவுக் கரசர் ஞானசம் பந்தர்
சுந்தரர் வாசகர் தந்தபா மாலைகள்
அருளொளி வீசும் பொருள்நிறை மணிகள்
சேக்கிழார் அருளிய தெய்வத் திருநூல்
பாக்களோ பக்திச் சுவைநனி சொட்டும்
பெரிய புராணம் அரிய காவியம்
ஆழ்வா ராதிகள் அருளிய பாசுரம்
கம்பன் தந்த களிமிகு காவியம்
மெய்கண்ட தேவரின் கைகண்ட ஞானம்
செய்தற் கரிய சித்தாந்த சாத்திரம்
வில்லி சொல்லிய வீர பாரதம்
எல்லாம் சமய இன்பத் தமிழாய்
வல்லார் பேணி வளர்த்தனர் அன்று
புறப்பொருள் அகப்பொருள் தந்த புலவர்கள்
நன்னூல் இலக்கணம் நவின்ற பவணந்தி
உச்சிமேல் புலவர்கொள் நச்சினார்க் கினியர்
மெச்சிடும் சேனா வரையர் பூரணர்
பேரா சிரியர் சீர்கல் லாடர்
ஆராய்ந்த நல்லுரைப் பரிமே லழகர்

அடியார்க்கு நல்லார் ஆகிய பல்லோர்
முடிவில் உரைகள் மொழிந்து காத்தார்.
வெண்பாவில் புகழேந்தி என்று வியந்திடும்
ஒண்பா வாணன் ஒட்டக் கூத்தன்
மாதர் நோக்கனைய வாக்கினில் வல்லான்
யாதையும் ஒட்டிப் பாடும் வித்தகன்
தேர்ந்த சந்தத் தீங்கவி பாடுவான்
ஆய்ந்தி டும்படிக் காசன் அரியவன்
அந்த கக்கவி வீர ராகவன்
பந்த நற்கவி பாடும் இரட்டையர்
அருண கிரிநா தன் கருணைக் கவிஞன்
பொருள்மிகு பாக்கள் புனைபொய் யாமொழி
முற்றும் துறந்த பட்டினத் தடிகள்
சற்றும் பற்றில்லாத் தாயு மானவர்
சமரச நன்னெறி காட்டிய தந்தையார்
அமுதப் பாக்கள் அருளிய வள்ளலார்
இன்னவர் எல்லாம் இதயம் கனிந்து
சொன்னசெஞ் சொற்கவி எண்ணில் அடங்கா!

**வசனம்**

அந்தக்காலத்தில் அரசியொருத்தி—குலோத்துங்கச் சோழனது பட்டத்தரசி, ஒட்டக் கூத்தன் பாட்டைக் கேட்டுக் கதவைத் தாழிட்டுக் கொண்டாள். அதுவும் இரட்டைத் தாழ்ப்பாள் போட்டாளாம். 'ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்ற பழமொழி எல்லோரும் தெரிந்தது தானே! இந்தக் காலத்திலே நம் பெண்களெல்லாம் பண்ணமைந்த தமிழ்ப்பாட்டைக்கேட்டு என்ன செய்கிறார்கள்? இரண்டு காதுகளையும் பொத்திக் கொள்கிறார்களோ? இல்லை இல்லை! தமிழார்வம் பொங்கித்

ததும்பி, எங்கும் பூரணமாய் வழிந்து கொண்டிருக்கும் போது அப்படிச் செய்வார்களா? காதுகளை மாத்திரம் அல்ல, வாயையும்கூட ஆ! என்று திறந்த வண்ணமிருந்து கேட்டு மகிழ்கிறார்கள்! அவர்களுக்குத் தமிழ்ப்பற்று ஏற்பட்டு விட்டால், நம் ஐயாமார்களுக்கு மெய்யாகவே தமிழ்ப் பற்றுப் பெருகிவிடும் அல்லவா!

பாட்டு

அந்தாதி கோவை அரிய பிரபந்தம்
சிந்தை கவர்ந்திடும் சிறுநூல் வகைகள்
தொண்ணூற் றாறு விதமாய்த் தோன்றி
பண்ணும் இலக்கணப் பண்போ டமைந்து
வளர்ந்து செழித்தாள் மக்கள் களிக்க,
தளர்ந்தவர் உளத்தைத் தட்டி யெழுப்பினாள்
கோவை இன்பம் கொண்டு குளிர்ந்தாள்
மேவும் பரணியால் வீரம் பேசினாள்
பிள்ளைக் கவியால் உள்ளம் கவர்ந்தாள்
தெள்ளிய தூது தெரிந்து கூறினாள்
வள்ளைப் பாட்டால் உள்ளம் குதித்தாள்
பள்ளு உலாவால் துள்ளி யாடினாள்
குறவர் மொழியால் குரவை பாடினாள்
ஏற்றப் பாட்டால் ஏற்றம் அடைந்தாள்
தெம்மாங்குப் பாட்டால் உள்ளம் திளைத்தாள்
சிந்துப் பாட்டால் சிந்தை உவந்தாள்
உவமை உருவகம் முதலாம் உயர்சுவை
அணிகள் பலவும் அணிந்து வளர்ந்தாள்.

வசனம்

முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னாலே நெல்லை நாட்டிலே சீவைகுண்டம் என்னும் ஊரிலே, வேளாளர்

குலத்திலே தெய்வக் கவிஞர் ஒருவர் தோன்றினர். அவர் முருகன் அருள்பெற்ற முத்தமிழ்க் கவிஞர்; ஐந்தாண்டுப் பருவத்திலேயே அருந்தமிழ்க் கவிதை பாடிய பெருமான்; குமரி முதல் இமயம் வரை சைவத்தையும் தெய்வத் தமிழையும் பரப்பிய பெருமான்; கங்கைக் கரையில் தமிழ்க் கொடியை நாட்டிய தனிப்பெருங் கவிஞர். அவர் யார் தெரியுமா? குமரகுருபரர்! இந்த அமரகவிஞரை அறியாதார் யார்?

இவரைப் போலவே நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னாலே நெல்லை நாட்டில் மற்றொரு தெய்வக் கவிஞர் தோன்றி யருளினர். அவர் பாவநாசத்தையடுத்த விக்கிரம சிங்க புரத்திலே அவதரித்தார். அவரும் ஐந்தாண்டுப் பருவத்திலேயே அழகிய கவிதை பாடிய அரும்புலவர். அவர் சிவஞான முனிவர். சைவசித்தாந்த சாத்திரங்களில் முதன்மை வாய்ந்த சிவஞானபோதத்திற்குச் சிற்றுரையும் பேருரையும் வரைந்தருளியவர் சிவஞான முனிவர். 'சிவஞான மாபாடியம்' என்று சைவர்கள் கொண்டாடும் பேருரையைத் தந்த பெருமை, அவரையே சாரும்.

இந்த இரு பெருந் தெய்வக்கவிஞர்களால் இரண்டு பெரிய மடாலயங்கள் மகிமையடைந்தன. குமரகுருபரரால் தருமையாதீனம் பெருமையுற்றது. சிவஞான முனிவரால் திருவாவடுதுறை யாதீனம் நிறைந்த பெருமையுற்றது. தருமையாதீனத்தின் பெருமைக்குக் காரணமான குமரகுருபரர் திருவருளால் திருப்பனந்தாள் ஆதீனம் தோன்றியது. இப்போது அத்திருப்பனந்தாள் ஆதினம் தமிழும் சைவமும் தழைக்கப், புரியும் தொண்டைப் போற்றுதார் யார்?

பாட்டு

குமர குருபரர் அமர கவிஞர்
சிவஞான முனிவர் சிவப்பிர காசர்
கச்சி யப்பர்முதல் ஒப்பில் கவிஞர்கள்
விச்சைகொள் வர்க்கால் மிக்கொளி செய்தார்
புலவர்க்கு ஔடதம் என்று போற்றிடும்
நலமிகு நைடதக் காவியம் நல்கி
அதிவீர ராமன் அருந்தொண்டு புரிந்தான்
மதிவர துங்கனும் மாண்பணி புரிந்தான்
கண்ணூறு கழிக்கக் காள மேகம்
பண்ணூறு வசைக்கவி பாடித் தொலைத்தான்
மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடிய
தேனிகர் நூல்கள் தெவிட்டாக் களஞ்சியம்
ஊறிய சைவத் துயர்தமிழ் வல்லார்
ஆறுமுக நாவலர் அரும்பணி செய்தார்
அரியகுற் றாலக் குறவஞ்சி அளித்தார்
திரிகூட ராசப்பத் தீங்கவி வாணர்
சுந்தரம் பிள்ளை தந்த நாடகம்
நந்தம் மனோன்மணி நவமணிக் குவியல்
பரிதிமால் கலைஞர் பணிபல செய்தார்
அரிது முயன்ற சாமிநா தையர்
அச்சிட் டுதவினர் அருந்தமிழ் நூல்கள்
அழகிய சொக்கரின் அரிய பாடல்கள்
வேப்பா சூவின் வியத்தகு ஞானம்
கேட்போர் விரும்பக் கிளர்சுவை யூட்டும்
விச்சையில் வல்ல வீரச் சிதம்பரம்
திக்கெட் டும்தமிழ் முரசு கொட்டினர்
அயல்நாட் டிருந்து வந்த அறிஞர்கள்
நயமிகு வீரமா முனிவர் நாவலர்

தேம்பா வணியால் ஓம்பி வளர்த்தார்
மேம்படு கால்டு வேலர் தமிழுக்கு
ஒப்பிலக் கணத்தை உவந்து கொடுத்தார்
ஒப்பில் ஜியூப் போப்பெனும் உயர்தவர்
தமிழ்மறை வாசகம் மொழிபெயர்த் தளித்தார்
தமிழ்மா ணவராய்த் தருக்கி விளங்கினர்
அகராதி வகுத்த அறிஞர் உவின்சுலோ
தகவுறத் தமிழைத் தாங்கிப் போற்றினர்.

வசனம்

இவ்விதமாக அயல்நாட்டிலே யிருந்துவந்த பிற மொழி அறிஞரெல்லாம் தமிழைப் படித்தார்கள். அதன் இனிமையிலே மனத்தைப் பறிகொடுத்தார்கள். தமிழை வளர்க்கவும் செய்தார்கள். அவர்களுக்கு இருந்த தமிழ்ப் பற்றுக்கூட நம் தமிழர்க்கு இல்லையே! ஐயோ! தமிழே! தமிழ் நாடே!

பாட்டு

என்று பாரதி இரங்கி வருந்தினர்
ஒன்று சேருவீர் தமிழை உயர்த்த
விழிமின் எழுமின் என்று முழங்கினர்
மொழியின் பெருமையை முழக்கினர் எங்கும்

இசைவேறு

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மைகெட்டு

நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை வெறும் புகழ்ச்சியில்லை
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ஒருசொல் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்!

**வசனம்**

என்று தமிழின் பெருமையையும் தமிழ்ப் புலவர் பெருமையையும் தமிழ்நாட்டின் பெருமையையும் நாடெங்கும் கொட்டி முழக்கினர். முரசு கொட்டி முழக்கினர். பாரதியின் வீர முழக்கத்தைக் கேட்டுத் தமிழர் விழித்தெழுந்தனர். 'சுதந்திரம் எமது பிறப்புரிமை, அதனை அடைந்தே தீருவோம்' என்று வீறுகொண்டனர். 'அடிமை விலங்கைத் தகர்த்தெறிவோம்' என்று ஆர்ப்பரித்தனர். அவ்வளவு வீர உணர்ச்சியை ஊட்டியது பாரதியின் பாட்டு!

**பாட்டு**

நாமக் கல்லார் நாட்டுக் கவிஞர்
தாமும் தமிழைத் தாங்கிப் பிடித்தார்
கவிமணி பாடிய இனிய கவிதைகள்
புவியினர் போற்றும் புத்தரின் சரிதம்

சித்தம் கனிந்த சுத்தா னந்தரின்
புத்தம் புதிய வித்தகப் பாக்கள்
பாவுக் கினிய பாரதி தாசனின்
நாவுக் கினிக்கும் நற்றமிழ்க் கவிதை! —ஆகா!

இசைவேறு

இனிமைத் தமிழ்மொழி எமது—எமக்கு
இன்பம் தரும்படி வாய்ந்தநல் லமுது
கனியைப் பிழிந்திட்ட சாறு—எங்கள்
கதியில் உயர்ந்திட்ட யாம்பெற்ற பேறு
தனிமைச் சுவையுள்ள சொல்லை—எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாம்கண்ட தில்லை
நனியுண்டு நனியுண்டு காதல்—தமிழ்
நாட்டினர் யாவர்க்குமே தமிழ்மீதில் —என்று

இசைவேறு

துள்ளிக் குதித்திடும் தெள்ளமுதப் பாக்கள்
பாண்டித் துரையின் பைந்தமிழ்த் தொண்டு
சேது பதிகளின் செந்தமிழ்ப் பணிகள்
மாம்பழக் கவியின் மதுரப் பாடல்கள்
சைவசித் தாந்தக் கழக நற்பணி
மதுரை வள்ளுவர் கழகம் செய்பணி
திருச்சி நற்சபை ஆற்று பொற்பணி
திருமங் கிரநகர்ச் சித்தாந்த சபை
தென்காசி வள்ளுவர் கழகம் செய்பணி
நெல்லை அருணகிரி மன்ற நீள்பணி
இன்னும் பற்பல சங்கத் தின்பணி
செந்தமிழ்ச் செல்வி சந்தத் தமிழ்ப்பொழில்
செந்தமிழ் போதினி கலைமகள் முதலாம்

செய்தித் தாட்கள் செய்யும் சேவைகள்
உய்வைத் தமிழுக்கு உவந்தளிப் பனவே
ஞானியா ரடிகளின் ஞான நயவுரை
மாணிக்க நாயகர் ஆணிப்பொன் னறிவு
மறைமலை யடிகளின் உரைநடை நூல்கள்
கழகம் நிறுவிய கவினறி வாளர்
திருவரங்கரின் தெய்வத் தமிழ்ப்பணி
அன்னவர் வாழ்க்கை அருந்துணை நல்லார்
கன்னித் தனித்தமிழ் காத்த நீலாம்பிகை
மறைமலை யருளிய மாதர் தனிநடை
காசுப் பிள்ளையின் மாசில் ஆராய்ச்சி
தூசுக் காவின் தூய சித் தாந்தம்
இராக வையங்கார் இனியநுண் ணறிவு
பூரண லிங்கரின் பொங்கிய புலமை
திருவிக் காவின் தீந்தமிழ்த் தென்றல்
ஆர்க்கே சண்முகம் அரிய சிலம்பொலி
சேதுப் பிள்ளையின் மோனை முத்தமிழ்
அண்ணு மலைமன் அமைத்த கலைப்பணி
பண்டித மணியின் தண்டமிழ் ஞானம்
நாவலர் பாரதி வீர நல்லுரை
உமா மகேசுரர் உயரிய தமிழ்ப்பணி
கரந்தைக் கவியரசு உரந்தரு புலமை
நாட்டவர் போற்றிய நாட்டார் நயவுரை
ஈட்டி ராசேசுவரி இனிய விஞ்ஞானம்
இரசிக மணியின் எளிய தமிழுரை
தீப்பி மீயின் தேர்ந்த நல்லறிவு
ஏசிச் செட்டியார் தேசு கொள்ளறிவு
வரத ராசரின் மதிமிகு நுட்பம்
ஔவை துரைசாமி செவ்விய புலமை

அப்பாத் துரையின் பன்மொழி அறிவு
செப்பும் கிராமணி சீறு முழக்கம்
தேவ நேயப்பா வாணர் மொழித்திறம்
மேவு சீர்மகிழ்நன் மென்மைத் தமிழ்நடை
இராச மாணிக்கம் வீசும் தமிழொளி
பெரியார் அரிய அரசியல் முழக்கம்
அண்ணுத் துரையின் அரிய சொற்சுவை
என்னெஸ் கேயின் இனிய நகைச்சுவை
இலக்குவ ஞரின் எளிய உரைநடை
எல்லாம் தமிழை இனிது வளர்த்தன
இந்த விழாவில் கலந்துநன் கிருந்து
செந்தமிழ்ச் சுவைத்தேன் சிந்தை பருகிடும்
நீங்களும் தமிழைப் பாங்குற வளர்த்தீர்
ஓங்கி நம்தமிழும் உயர்ந்து வளர்ந்தது.

## இசைவேறு

தமிழ் வாழ்க! தமிழ் வாழ்க! என்றுநீ பாடு
தமிழ் வெல்க! தமிழ் வெல்க! என்றுதினம் ஆடு
தமிழை அழிப்பாரைத் தலைதுணிக்க ஓடு
தமிழைப் பழிப்பாரைத் தவிடாக்கச் சாடு
தமிழர்கள் உலகிலே தனியரசு கண்டார்
தமிழர்கள் இனிமேலும் தனியரசு காண்பார்.

## இசைவேறு

வாழியவே! புலவரெல்லாம், வாழியவே! தமிழ்மொழியும்
வாழியவே! கழகங்கள், வாழியவே! தமிழ்நாடும்
வாழியவே! நீங்களெல்லாம் வளர்தமிழைக் கேட்டதனுல்
வாழியவே! நாங்களெல்லாம் வளர்தமிழைப் பாடியதால்
வந்தவர்கள் போனவர்கள் எல்லோரும் வாழியவே!

நின்றவர்கள் இருந்தவர்கள் நீடூழி வாழியவே!
வாழியவே! தமிழ்த்தாய்க்கு வரும்பெருமை நம்பெருமை
வணக்கம்ஐயா! உங்களுக்கு, வணக்கம் அம்மா! தங்களுக்கு;
போய்வருவோம் நாங்களெல்லாம் மறந்துநீர் போயிடாதீர்
ஆய்தமிழை வளர்த்திடுவீர்! அமரர்களாய் வாழ்ந்திடுவீர்!
திருக்குறளைப் படித்திடுவீர்! தெள்ளியராய் வாழ்ந்திடுவீர்!
பொதுமறையைப் போற்றிடுவீர்! புலவர்களாய் ஆகிடுவீர்!
தமிழ்வேதம் ஓதிடுவீர்! தலைவர்களாய்த் திகழ்ந்திடுவீர்!
நீதிநூல் ஓதிடுவீர்! நேர்மையராய் வாழ்ந்திடுவீர்!
நிச்சயம்! நிச்சயம்! நிச்சயம்!

**தமிழ் வேல்க!**



கழக வெளியீடு—௬௨௨



*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY :: MADRAS-1.

*Head Office:*

24, EAST CAR STREET :: THIRUNELVELI

விலை அணா 6.

அப்பர் அச்சகம், சென்னை - 1.